

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## மார்ச் - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 19.03.2020

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- பொருளாதார நிகழ்வுகள்









# தமிழக நிகழ்வுகள்

- **மாநில நெடுஞ்சாலைகள் (ம) மாவட்ட முக்கிய சாலைகள் ரூ.1500 கோடி செலவில் மேம்படுத்தப்படும்** என்று முதல்வர் **எடப்பாடி கே.பழனிசாமி** அறிவித்துள்ளார்.
  - தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் மூலமாக உலக வங்கியின் கூடுதல் நிதியுதவியுடன் ஓமலூர் - மேச்சேரி சாலை, மல்லியக்கரை – ஆத்தூர் சாலை, மாநில நெடுஞ்சாலை – 15 உள்ள முக்கிய சாலைகள் உட்பட ஏழு சாலைகள் ரூ.1500 கோடி மதிப்பில் மேம்படுத்தப்பட உள்ளன.
  - **செய்தி துளிகள் :**
    - இந்தியாவின் கிழக்கில் வங்காள விரிகுடாவையும், மேற்கில் அரபிக் கடலையும் கடல்வழியாக இணைப்பதற்கு ஏதுவாக மன்னார் வளைகுடா (ம) பாக்ஜலசந்தி பகுதிகளை இணைக்கும் பாம்பன் கால்வாயை தூர்வாருவதற்கும் பொருளாதார (ம) சுற்றுச்சூழல் தொழில்நுட்ப சாத்தியகூறுகளை ஆராய்வதற்காக ரூ.1 கோடி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

# தேசிய நிகழ்வுகள்

- **மாநிலங்களவை தேர்தலில் 6 பேர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளதாக** சட்ட பேரவை செயலாளரும், தேர்தல் நடத்தும் அதிகாரியுமான **கி.சீனிவாசன் தெரிவித்தார்.**
    - மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி திமுகவை சார்ந்த என்.ஆர்.இளங்கோ, ப.செல்வராசு, திருச்சி சிவா ஆகியோரும், அதிமுகவை சேர்ந்த மு.தம்பிதுரை, கே.பி.முனுசாமி மற்றும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் ஜி.கே.வாசன் ஆகிய 6 பேர் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
    - **செய்தி துளிகள் :**
        - சமீபத்தில் மாநிலங்களவை உறுப்பினராக முன்னாள் தலைமை நீதிபதியான ரஞ்சன் கோகோய் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
        - **ராஜ்ய சபாவின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை – 250**
        - ஜனாதிபதியால் தேர்வு செய்யப்படுபவர்கள் எண்ணிக்கை – 12

- சமீபத்தில் வன்முறைப் போராட்டங்களின் போது பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களை மீட்பதற்காக உத்தரப் பிரதேச மாநில அமைச்சரவையானது **'பொதுச் சொத்துக்களைச் சேதத்திலிருந்து மீட்பதற்கான அவசரச் சட்டம் 2020'** என்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.
    - இது அம்மாநிலத்தில் பொது சொத்துக்களின் இழப்பைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிகழ்வுகள்

- **எக்ஸோமார்ஸ் திட்டமானது மென்பொருள் பிரச்சினைகளால் 2 ஆண்டுகள் தாமதமாகத் செலுத்தப்பட இருக்கின்றது.**
  - இப்போது ஐரோப்பிய விண்வெளி அமைப்பின் திட்டமானது (European Space Agency Mission – ESA) 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
  - செவ்வாய்க் கிரகத்தின் மீதான எக்ஸோபயாலஜி அல்லது எக்ஸோமார்ஸ் என்பது ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் மற்றும் ரோஸ்கோஸ்மோஸ் (ரஷ்ய விண்வெளி நிறுவனம்) ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு கூட்டுத்திட்டமாகும்.
  - **செய்தி துளிகள் :**
    - செவ்வாய்க் கிரகத்தில் காணப்படும் நீர் குறித்த வரலாறு, அதன் புவி வேதியியல், வளிமண்டலக் கலவைகள் போன்றவற்றின் ஆய்வைத் தவிர செவ்வாய்க் கிரகத்தில் உயிர் வாழ்வதற்கான சாத்தியக் கூறை ஆய்வு செய்வதும் இதன் நோக்கமாகும்.
    - ரோசாலிண்ட் பிராங்க்ளின் என்பது எக்ஸோமார்ஸ் திட்டத்தில் பயன்படுத்தப்படும் ஒரு ஆய்வு வாகனமாகும்.

## பொருளாதார நிகழ்வுகள்

- **சரக்கு மற்றும் சேவைகள் வரி** (Goods and Services Tax – GST)

ஆணையத்தின் **39வது கூட்டமானது** சமீபத்தில் **டெல்லியில் நிறைவடைந்தது.** இந்தக் கூட்டத்தில் பல்வேறு பொருட்களுக்குப் பொருந்தக் கூடிய சரக்கு மற்றும் சேவைகள் வரி விகிதங்கள் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

- **கைபேசிகள்** மற்றும் அவற்றின் சில **உதிரிப் பாகங்கள்** மீதான **GST வரி விகிதமானது 12% லிருந்து 18%** ஆக **உயர்த்தப்பட்டுள்ளது.**
- விமானத்தின் எம்ஆர்ஓ சேவைகளுக்கு 18 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- கையால் தயாரிக்கப்பட்ட மற்றும் இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட தீப்பெட்டிகளுக்கு 12% ஆகத் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.
- **செய்தி துளிகள் :**
  - GST என்பது 101வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தால் 2016 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு அரசியலமைப்பு ரீதியிலான அமைப்பு ஆகும்.
  - இது அரசியலமைப்பின் 279ஏ என்ற சரத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.
  - இது மத்திய நிதியமைச்சர் அவர்களால் தலைமை தாங்கப்படுகின்றது.

## திருக்குறள்

**குறள் : 142**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : பிறனில் விழையாமை

**அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை**
**நின்றாரின் பேதையார் இல்.**

**விளக்கம்:** பிறனுடைய பொருளாயுள்ள மனைவியை விரும்பி நடக்கும் அறியாமை உலகத்தில் அறம், பொருள் ஆகியவற்றின் புகழ் அறிந்தவர்களிடத்தில் இல்லை.

We Shine Academy™